

முன்னாள் சபாநாயகரும், மதுரை தெற்கு மாவட்ட செயலாளரும் சேடபட்டி மு.மணிமாறன் தந்தையுமான சேடபட்டி இரா.முத்தையா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திருமங்களம் அருகில் உள்ள முத்தப்பன்பட்டியில் அமைந்திருக்கும் அன்னாரின் நினைவிடத்தில் நிதி மற்றும் மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மலர்வலையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர், உறவினர்கள், பொதுமக்கள் உள்ளனர்.



முன்னாள் சபாநாயகரும், மதுரை தெற்கு மாவட்ட செயலாளரும் சேடபட்டி மு.மணிமாறன் தந்தையுமான சேடபட்டி இரா. முத்தையா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு திருமங்கலம் அருகில் உள்ள முத்தப்பன் பட்டியில் அமைந்திருக்கும் அன்னாரின் நினைவிடத்தில் கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என். நேரு, விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர், வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் மலர்வலையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., திருச்சி மேயர் அன்பழகன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.எஸ்.வி.சித்தன், பாரதி மணிமாறன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், உறவினர்கள், பொதுமக்கள் உள்ளனர்.

# மருதா நதி அணையில் இருந்து முதல்போக சாகுபடிக்கு தண்ணீர்!

## அமைச்சர் ஐ. பெரியசாமி திறந்து வைத்தார்

திண்டுக்கல், செப்.22-

அய்யம்பாளையம், சித்தரேவு, தேவரப்பன்பட்டி ஆகிய பகுதிகளில் சுமார் 6ஆயிரத்து 583 ஏக்கர் நிலப்பரப்பு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மருதாநதி அணையில் இருந்து முதல் போக சாகுபடிக்காக தண்ணீரை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி திறந்து வைத்தார். தி.மு.க. ஆட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மருதாநதி அணை விவசாயி களின் பாதுகாப்பாக உள்ளது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பெருமிதமாக கூறினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அய்யம்பாளையம் கிராமம், மருதாநதி நீர்த்தேக்கத்திலிருந்து 20.09.2024 முதல் 120 நாட்களுக்கு பழைய ஆயக்கட்டிற்கு நாள் ஒன்றுக்கு விநாடிக்கு 20 கன அடியும், முதல் 30 நாட்களுக்கு மறைமுக மற்றும் புதிய ஆயக்கட்டிற்கு நாள் ஒன்றுக்கு விநாடிக்கு 70 கன அடியும் ஆக மொத்தம் நாளொன்றிற்கு விநாடிக்கு 90 கன அடிக்கு மிகாமலும் என்ற வகையில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக மருதாநதியிலிருந்து தண்ணீர் திறந்துவிடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவிற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.ந.பூங்கொடி தலைமை தாங்கினார். திண்டுக்கல் எம்.பி.ஆர்.சச்சிதானந்தம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் மு.பாஸ்கரன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைத்தலைவர் ஹேமலதா மணிகண்டன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன், அய்யம்பாளையம் பேரூராட்சித்தலைவர் ரேகா ஐயப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மஞ்சளாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் சரவணன் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் ஆயக்கட்டு விவசாயிகளுடன் வழிபாடு செய்த பின்பு அணையின் மேற்பரப்பிற்கு வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பட்டனை அழுத்தி முதல் போக சாகுபடிக்காக தண்ணீரை திறந்து வைத்தார்.

அதன்பின்னர் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தமிழகத்தின் தென்னை விவசாயிகளின் தாய்வீடாக அய்யம்பாளையம் உள்ளது. இப்பகுதியில் உள்ள தென்னை மரங்கள் அனைத்தும் 100 முதல் 150 வயது உடையவை இங்கிருந்துதான் தென்னங்கன்றுகளை வாங்கி தமிழகம் முழுவதும் கொண்டு சென்று தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு புகழ்பெற்ற அய்யம்பாளையம் தென்னை விவசாயிகள் மற்றும் விவசாயிகளின் நலன் கருதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 1972ம் ஆண்டு பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்ட அணை தான் மருதாநிதி அணை இந்த அணையிலிருந்து தண்ணீர்; திறந்துவிடும் போதெல்லாம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு செய்த நலத்திட்டங்கள் மனதில் பதியும் என்றார். இன்று தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஆத்தூர் வட்டத்தில் அய்யம்பாளையம், சித்தரேவு, தேவரப்பன்பட்டி ஆகிய பகுதிகளில் 5943 ஏக்கர் நிலங்களும், நிலக்கோட்டை வட்டத்தில் சேவுகம்பட்டி. கோம்பைபட்டி ஆகிய பகுதிகளில் 640 ஏக்கர் விவசாய நிலங்களும் என மொத்தம் 6,583 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன என்றார். மருதாநதி அணையின் உயரம் 74.00 அடி. தற்போதைய நீர்மட்டம் 71.00 அடியாக உள்ளது. அணையின் மொத்த கொள்ளளவு 188.5 மில்லியன் கன அடியாகும். தற்போதைய நீர் இருப்பு 169.000 மில்லியன் கன அடியாக உள்ளது. நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தை பொறுத்து பாசனத்திற்கு தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்படும். மேலும், மருதாநதி அணை அய்யம்பாளையம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு குடிநீர் ஆதாரமாக உள்ளது. மருதாநதி அணையிலிருந்து தற்போது தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், விவசாயிகள் அனைவரும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு அதிக மகசூல் பெற்று பயன்பெற வேண்டும். மருதாநதி அணை கீழ் பகுதியான வடக்கு வாய்க்கால், தெற்குவாய்க்கால் சீரமைப்பு தொடர்பாக வேறு ஒரு திட்டம் மூலம் ஆக்கப்பூர்வமான செயல் வடிவம் உருவாக்கப்படும் விரைவில் இதுசம்பந்தமாக விவசாயிகளுடன் கலந்தாலோசித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

நீர் ஆதாரங்களில் குடிமராமத்து பணிகள் விவசாயிகளின் 10 சதவீதம் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அரசு சார்பில் முழுமையான குடிமராமத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது செய்யப்பட்ட குடிமராமத்து பணிகள் உண்மையான குடிநீர் மராமத்து பணிகள் இல்லை. திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறும் விவசாயிகளின் நலன் காக்கும் ஆட்சியில் நீர்; ஆதாரங்களில் நடைபெறும் இந்த குடிமராமத்து பணிதான் உண்மையான குடி மராமத்து பணி என்றார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மோட்டார் தொழில்களுக்கு உகந்த இடமாக தமிழகம் உருவாக்கப்பட்டது. அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதன்மூலம் தொழில் வளர்ச்சி மேம்பாடு அடைவதுடன், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்து உற்பத்தி அதிகரித்து, அதன்மூலம் மாநில வருவாய் உயர்ந்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் உத்தரவுப்படி, தமிழ கத்தில் உள்ள அனைத்து அணைகளில் இருந்தும் விவசாய பாசனத்திற்காக உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. தற்போது தொடர்ந்து மழைப் பொழிவு இருந்து வருவதால் தட்பவெப்ப நிலை விவசாயத்திற்கு சாதகமாக மாறி வருகிறது.

இதனால் தமிழகத்தில் விவசாயம் நடைபெறாத பகுதிகளில் கூட விவசாயப் பணிகள் மேற்கொள்ளும் வகையில் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதோடு, விவசாயிகளுக்குரிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு அமைந்துள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் மஞ்சளாறு வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர் செல்வம், மருதாநதி அணை உதவி பொறியாளர் கண்ணன், முன்னாள் ஒன்றிய தி.மு.க.செயலாளர் பி.சி. முரளிதரன், பொதுக்குழு உறுப்பினர் அய்யம்பாளையம் ரமேஷ், தி.மு.க. நிர்வாகிகள் ரெக்ஸ், அம்மை ரவி, முன்னாள் ஒன்றிய பெருந் தலைவர் மலர்க்கண்ணன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் அய்யங்கோட்டை குமரேசன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், அய்யம்பாளையம் பேரூர்கழக செயலாளர் தங்கராஜ், ஒன்றிய குழு உறுப்பினர்கள் காணிக்கைராஜ், சித்தரேவு சாதிக், அழகு சரவணக்குமார், செல்வி காங்கேயன், அய்யம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் ஈஸ்வரி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், அய்யம்பாளையம் பேரூராட்சி தலைமை எழுத்தர் பாண்டி, பணியாளர் சுந்தர், விவசாயிகள் சங்க செயலாளர் வேல்வழுதி, துணைத்தலைவர் மூர்த்தி, மணலூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மகாராஜன், தி.மு.க. நிர்வாகி கொங்கப்பட்டி ஜெயராஜ், உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

தங்களின் கோரிக்கையை ஏற்று மருதாநதியிலிருந்து தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு விவசாய சங்கத்தினர் சால்வை மற்றும் மாலை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர்.




கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் தலைமையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் பற்றியும், இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கை தீவிரப்படுத்தவும், கழக வளர்ச்சிக்கான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் என்.தில்லை செல்வம், வழக்கறிஞர் பி.புகழ்காந்தி, எப்.எம்.இராஜரெத்தினம், ஐ.கேட்சன், எம்.மதியழகன், ப.பன்னீர் செல்வம், இ.ஜவஹர், என்.பி.துரை, த.ஜீவா, மு.சேக் மீரான், நாகர்கோவில் மாநகர கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், BLA-2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போகலூர் ஊராட்சி ஒன்றியம் குமுக்கோட்டை ஊராட்சி பூவிளத்தூர் கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024–2025, கீழ் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் புதிய நிழற்குடை கட்டுவதற்கான பணியை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் போகலூர் ஒன்றிய பெருந்தலைவர் சத்யா குணசேகரன், போகலூர் ஒன்றிய குழு துணைத் தலைவர் பூமிநாதன், குமுக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் ராமமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு மு. நடராசன்
### செப்டம்பர் 22 (2004)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.**

**ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.முத்துக்குமார்
### செப்டம்பர் 22 (2022)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து கோவை பகுதியில் கழகம் வளரபாடுபட்டவர்.**

**1953ஆம் ஆண்டு கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று கலந்து கொண்டதற்காக தண்டனை பெற்று கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.**

**சிறையில் இருந்தபோது, மன்னிப்பு கடிதம் எழுதி கொடுத்துவிட்டு விடுதலை பெறலாம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னபோது, "எனது உயிரற்ற உடல் வேண்டுமானால் வெளியே வரும். ஆனால், நான் மன்னிப்பு கேட்டு வெளியே வரமாட்டேன்." என்று முழக்கமிட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**சிறைவாசம் முடிந்து விடுதலை அடைந்த நாளில் பேரறிஞர் அண்ணா அவர்கள் சிறைவாசலில் வந்து வரவேற்ற பெருமைக்குரியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**